# தேசபக்தி
DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்


RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 079 ★21.07.2026 ★தமிழ் நாளிதழ் ★செவ்வாய்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:079 ★21.07.2026 ★TamilDaily ★Tuesday ★Page-4 ★Price-₹5/- Chennai



## கோணிமேடு கிராமம் ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் ஆடிமாத தீமிதி திருவிழா

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பம்மதுகுளம் ஊராட்சி கோணிமேடு அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் 28ஆம் ஆண்டு ஆடிமாத தீமிதி திருவிழா ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் காப்புகட்டுதல், பூங்கரகம் எடுத்தல், அக்னி கப்பறை எடுத்தல், கங்கைநீர் திரட்டுதல், கூழ்வார்த்தல், பதிவிளக்கு பூஜை மற்றும் அம்மனுக்கு அபிஷேகம் செய்து சிறப்பு அலங்காரத்துடன் மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் 120க்கும் மேற்பட்ட காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர்.

இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள்சார்பில் அறுசுவை அன்னதானம், சுவையான குளிர் பானங்களைபக்தர்களுக்குவழங்கினர். இத்திருவிழாவிற்குஆலயநிர்வாகிகள், சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு பொங்கல் வைத்து அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கையுடன் திருவீதி உலா நடைபெற்றது.

## ஜவ்வாதுமலையில் சுற்றுலா பயணிகளை மயக்கும் மலர் குடில்



திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாதுமலையில் நடைபெற்று வரும் 26வது கோடை விழாவில், தோட்டக்கலைத் துறை அமைத்துள்ள வண்ண மலர் குடில் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளது. பல்வேறு நிறங்களில் மலர்ந்த மலர்களால் அலங்கரிக்கப்பட்ட இந்த அழகிய குடில், விழா வளாகத்தின் முக்கிய கவர்ச்சியாக மாறியுள்ளது.

மலர்களின் மணமும், வண்ணங்களின் ஒளிவுமாய் கண்கவர் தோற்றத்தில் அமைந்துள்ள இந்த குடிலில், சுற்றுலாப் பயணிகள் ஆர்வமுடன் புகைப்படம் எடுத்து மகிழ்ந்து வருகின்றனர்.

ஜவ்வாதுமலை கோடை விழாவுக்கு வருகை தரும் மக்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும் வகையில் இந்த மலர் குடில் அமைந்துள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## இந்தியன் மெடிக்கல் அசோசியேஷன் சென்னை செங்குன்றம் கிளை சார்பில் மருத்துவர் தினம்






இந்தியன் மெடிக்கல் அசோசியேஷன் சென்னை செங்குன்றம் கிளை சார்பில் மருத்துவர் தின விழா சென்னை கோயம்பேடு ஜெபி.ஹோட்டலில் சென்னை செங்குன்றம் கிளைத் தலைவர் டாக்டர் கோபால் துரைச்சாமி தலைமையில் நடைபெற்றது.

செயலாளர் டாக்டர் கமல்ராஜ், நிதித் துறை செயலாளர் டாக்டர் லாவண்யா, உறுப்பினர் டாக்டர் லியோ ஜீவாஸ், டாக்டர் ஆறுமுகசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எம்.எஸ். ரவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மருத்துவர்கள் லியோ ஜீவாஸ், ஸ்ரீவெங்கடேஸ்வரா மருத்துவக் கல்லூரி முதல்வர் சபீதா, செங்கல்பட்டு அரசு மருத்துவமனை முதல்வர் பிரியா பசுபதி, சேதுராமன், அர்னால்ட், சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் ரங்கராஜன், தமிழ்நாடு பார்கவுன்சில் மாநிலத் தலைவர் பி.எஸ். அமல்ராஜ் ஆகியோருக்கு மருத்துவர் தின விருதை வழங்கி கௌரவித்தார்.

பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எம்.எஸ். ரவிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அப்போலோ மருத்துவமனை மருத்துவர்கள் கென்னி ராபர்ட், ராஜேஷ் கர், ஜி.லோகநாதன் ஆகியோர் மருத்துவர் தின உரையாற்றினர்.

இந்நிகழ்வில் சென்னை செங்குன்றம் கிளை இணைச் செயலாளர் மருத்துவர் எஸ்.சுகபிரகாஷ், மருத்துவர்கள் சிற்றம்பலம் உள்ளிட்ட மருத்துவர்கள் குடும்பத்தோடு கலந்துகொண்டனர். குழந்தைகளின் பரதநாட்டியம், ஆடல் பாடல் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

# முதல்அமைச்சர் விஜயுடன் போர்டு நிறுவனத்தின் உயர்மட்டக் குழுவினர் சந்திப்பு




தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

முதல் அமைச்சர் விஜய்யை இன்று (20.7.2026) தலைமைச் செயலகத்தில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற கார் உற்பத்தி நிறுவனமான போர்டு நிறுவனத்தின் துணைத்தலைவர்மேத்யூ கோட்லெவ்ஸ்கி (*Thiru. Mathew Godleweski*) தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பின்போது, இந்நிறுவனம், தமிழ்நாட்டில் தனது உற்பத்தி திட்டத்தைமீண்டும்தொடங்குவது பற்றியும், தற்போது நிறுவியுள்ள உலகளாவிய திறன் மையங்கள் விரிவாக்கம் தொடர்பாகவும், இனிவரும் காலங்களில், உற்பத்தித் துறையில் மேற்கொள்ளப்படவுள்ள விரிவாக்க திட்டங்கள் குறித்தும் விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

போர்டு நிறுவனம், சென்னையில், ஒரு மிகப் பெரிய உலகளாவிய திறன் மையம் ஒன்றினை செயல்படுத்தி வருகிறது. 12,000 தொழில்நுட்ப வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், சமீபத்தில்தான், இந்நிறுவனம், கோயம்புத்தூரில் ஒரு உலகளாவிய திறன் மையம் நிறுவியுள்ளது. அதுமட்டுமின்றி, தற்போது உள்ள மறைமலை நகர் உற்பத்திச் சாலையில், 3250 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், இன்ஜின்கள் உற்பத்தி தொடங்க உள்ளது. விரிவாக்க திட்டங்கள் இச்சந்திப்பின்போது, போர்டு நிறுவனத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையேயான 30 வருட உறவை நினைவுகூர்ந்த முதல்அமைச்சர், விரைவில் இந் நிறுவனம் மேற்கொள்ளப்பட உள்ள உற்பத்தித் திட்டத்திற்கு அனைத்து ஒத்துழைப்பையும் அரசு வழங்கும் என்று முதல்அமை ச்சர் உறுதியளித்தார்கள். மேலும், மறைமலைநகர் உற்பத்திச் சாலையை முழு அளவிற்கும் பயன்படுத்திடும் வகையில், போர்டு நிறுவனம், மீண்டும் தனது உற்பத்தியையும், விரிவாக்க திட்டங்களை யும் மேற்கொள்ள வேண்டும் என்றும் முதல்அமைச்சர் கேட்டுக் கொண்டார்கள். இந்நிகழ்வில், தொழில் துறை அமைச்சர் எஸ். கீர்த்தனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச. விஜயகுமார், ஐ.ஏ.எஸ்., வழிகாட்டிநிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தீபக் ஜேக்கப், ஐ.ஏ.எஸ்., போர்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்சிமோனெட்டா வெர்டி (*Ms. Simonetta Verdi*), போர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உற்பத்திப் பிரிவு இயக்குநர் தீரஜ் தீக்ஷித், *Country Director* முனைவர் ஸ்ரீபாத்பட், இயக்குநர் வி. ராஜா விமல குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுக்க தீவிர நடவடிக்கை

## மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் அதிரடி உத்தரவு





திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தலைமையில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்த முக்கிய ஆய்வுக் கூட்டம் இன்று (20.07.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்நடைபெற்றது. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் இந்தக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இக்கூட்டத்தில் பெண்களுக்கு ஏற்படுகின்ற வன்கொடுமைகள் குறித்தும், அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்குறித்தும், பெண்களின் பள்ளி கல்வி மற்றும் உயர் கல்வியை உறுதிசெய்வதுகுறித்தும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. மேலும், 'சிங்கப்பெண் அதிரடிப் படையின்' செயல்பாடுகள், மாவட்டம் முழுவதும் குழந்தை திருமணத்தை தடுக்கும் பொருட்டு ஏற்படுத்த வேண்டிய விழிப்புணர்வு மற்றும் குழந்தை தொழிலாளர்களைதடுக்கும் நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. பெண்கள் மற்றும் குழந்தைகள் வன்கொடுமையில் ஈடுபடுவர்கள் மீது மிகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எச்சரித்த மாவட்ட ஆட்சித்தலைவர், வன்கொடுமைகளைத் தடுக்க விரைந்து நடவடிக்கை எடுக்கும்படியும், விழிப்புணர்வை தீவிரப்படுத்தும்படியும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் அ.சிவசுப்பிரமணிய பிள்ளை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராமகிருஷ்ணன், வருவாய் கோட்டாட்சியர்கள் செல்வம் (திருவண்ணாமலை), சிவா (ஆரணி) மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## புளியங்குடியில் we the leader சார்பில் போதைக்கு எதிரொன விழிப்புணர்வு ஆர்ப்பாட்டம்






புளியங்குடியில் *we the leader* சார்பில் போதைக்கு எதிரொன விழிப்புணர்வு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட புளியங்குடியில் ( *we the Leaders*) வீ த லீடர்ஸ் சார்பில் போதை விழிப்புணர்வு பேரணியானது டிஎன் புதுக்குடி பேருந்து நிலையம் முன்பு புளியங்குடி ஒருங்கிணைப்பாளர் சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் போதைக்கு எதிரானவிழிப்புணர்வு ஆர்ப்பாட்டத்தில் போதைக்கு எதிரான கோசங்கள் அடங்கிய விழிப்புணர்வு பாதாகைகளை கையில் ஏந்தியும் போதைக்கு எதிராக உறுதி மொழி ஏற்றும் விழிப்புணர்வு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விழிப்புணர்வு ஆர்ப்பாட்ட ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் முருகேசன், ஆறுமுகம் (எ) முருகேசன், யோகாடவர் சேகர், ராஜகுல சேகர பாண்டியன், டாக்டர் சுப்புராஜ், நாகராஜ், உறுப்பினர்கள் முருகன் மோட்டார்ஸ் குருநாதன், உமா மகேஸ்வரன் ராயல் கலெக்ஷன், ஸ்டாலின், முத்து கோபாலகிருஷ்ணன், இசக்கிகுமார், ஸ்ரீராம் சுப முருகன், வாசு சட்டமன்ற தலைவர்கள் செல்வி, சுப கார்த்திகா, முத்துப்பாண்டி, பூரண செல்வன், கண்ணன், குமார், சுப்பிரமணியன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினப்பயணிகளின் அவலநிலை... ரயிலில் சீட் ஆக்கிரமிப்பு அட்டகாசம்:

# மாரிக்குப்பம் முதல் பங்காருபேட்டை வரை பயணிகளின் குறைகளை ரயிலுக்குள்ளேயே கேட்டறிந்த டி.எஸ்.பி. மற்றும் போலீஸ் அதிகாரிகள்

கோலார் தங்க வயல்: மாரிக்குப்பம், சாம்பியன், ஊரிகம், கோரமண்டல், பி.இ.எம்.எல்., சின்னகோட்டா மற்றும் பங்காருபேட்டை வழியாக கே.எஸ்.ஆர். பெங்களூர் சிட்டிக்கு இயக்கப்படும் பயணிகள் ரயில், தினமும் ஆயிரக்கணக்கான அரசு மற்றும் தனியார் நிறுவன ஊழியர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள், பெண்கள் மற்றும் முதியவர்களின் முக்கிய போக்குவரத்து வசதியாக இருந்து வருகிறது. இந்த ரயிலை நம்பியே ஏராளமான தினப்பயணிகள்தங்களது வேலை, கல்வி மற்றும் வாழ்வாதாரப் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், நீண்டகாலமாக இந்த ரயிலில் தொடரும் சீட் ஆக்கிரமிப்பு பிரச்சினை, தினப்பயணிகளுக்கு பெரும் அவதியை ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக, பங்காருபேட்டை ரயில் நிலையத்தில் இருந்தே சிலர் பல இருக்கைகளை முன்கூட்டியே பிடித்து வைத்து, பின்னர் ஏறவுள்ள நண்பர்கள்அல்லது தெரிந்தவர்களுக்காக அவற்றை காலியாக வைத்திருப்பதாக பயணிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

இதனால் மாரிக்குப்பம், சாம்பியன், ஊரிகம், கோரமண்டல், பி.இ.எம்.எல்., சின்ன கோட்டா உள்ளிட்ட



நிலையங்களில் ரயிலில் ஏறும் பயணிகளுக்கு அமர இடம் கிடைக்காமல், நீண்டதூரம் நின்றபடியே பயணம் செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இந்தப் பிரச்சினை குறித்து தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து, கோலார் தங்க வயல் டி.எஸ்.பி. மற்றும் போலீஸ் அதிகாரிகள் ரயிலுக்குள்ளேயே நேரில் சென்று பயணிகளைச் சந்தித்தனர்.

ஒவ்வொரு பெட்டியிலும் சென்று பயணிகளிடம் குறைகளைக் கேட்டறிந்து, அவர்களின் கருத்துகளையும் பதிவு செய்தனர்.

அப்போது, தினப்பயணிகள் பல ஆண்டுகளாக இந்தப் பிரச்சினை தொடர்ந்து வருவதாகவும், குறிப்பாக பெண்கள், முதியவர்கள் மற்றும் மாணவர்கள் அதிக சிரமத்தை எதிர்கொள்வதாகவும் தெரிவித்தனர்.

இதையடுத்து டி.எஸ்.பி., பொதுப் போக்குவரத்தில் அனைவருக்கும் சம உரிமை இருப்பதாகவும், யாரும் பல இருக்கைகளை ஆக்கிரமித்து மற்றவர்களின் உரிமையை பறிக்கக் கூடாது என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், "இவர் வருகிறார், அவர் வருகிறார்" என்று கூறி இருக்கைகளை காலியாக வைத்திருப்பது ஏற்றுக்கொள்ள முடியாத செயல் என்றும், இனி இதுபோன்ற சம்பவங்கள் நடந்தால் உடனடியாக ரயில்வே அதிகாரிகளுக்கும்காவல் துறைக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் பயணிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

சீட்ஆக்கிரமிப்புமூலம் மற்ற பயணிகளுக்கு இடையூறு விளைவிப்பவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அனைவரும் ஒழுங்காகவும் பொறுப்புடனும் பயணம் செய்ய வேண்டும் என்றும் டி.எஸ்.பி. மற்றும் போலீஸ் அதிகாரிகள் எச்சரித்தனர். ரயிலுக்குள்ளேயே அதிகாரிகள் நேரில் வந்து பயணிகளின் குறைகளைக் கேட்டறிந்தது தினப்பயணிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. நீண்ட காலமாக நிலவி வந்த பிரச்சினைக்கு அதிகாரிகள் நேரடியாக கவனம் செலுத்தியது மகிழ்ச்சி அளிப்பதாகவும், இனி அனைவருக்கும்சமமான பயண உரிமை கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் பயணிகள் தெரிவித்தனர். பொதுப் போக்குவரத்து என்பது அனைவருக்கும் சொந்தமான சேவை. ஒவ்வொரு பயணியும் மற்றவர்களின் உரிமையை மதித்து நடந்து கொண்டால் மட்டுமே பாதுகாப்பான, ஒழுங்கான மற்றும் மனிதநேய மிக்க பயணச் சூழல் உருவாகும். இந்த நடவடிக்கை அந்த நல்ல மாற்றத்திற்கான முக்கிய தொடக்கமாக அமைந்துள்ளது.



திண்டுக்கல்மாவட்டஆட்சியர்அலுவலகம்முன்புதமிழ்நாடுமாநிலதொடக்ககூட்டுறவுஅனைத்து பணியாளர்கள் சங்கம் திண்டுக்கல் மாவட்டம் சார்பாகபல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

# எஸ்.கே.பி. வனிதா பள்ளியில் மாணவர் தலைமைப் பொறுப்பேற்பு விழா

திருவண்ணாமலையில் உள்ள எஸ்.கே.பி. வனிதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களின் தலைமைப் பொறுப்பேற்பு விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவில் மாணவர்களுக்கு தலைமைப் பொறுப்புகளுக்கான பதக்கங்கள் வழங்கப்பட்டு, புதிய மாணவர் தலைமை குழு பொறுப்பேற்றது.

SKP கல்விக் குழுமத் தலைவர் கு. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற விழாவில், இணைச் செயலாளர் கே.வி. அரங்கசாமி மற்றும் முதன்மை நிர்வாக அதிகாரி முனைவர் ஆர். சக்தி கிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய நிகழ்ச்சியில், கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் எ. இலட்சுமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பதக்கங்கள் அணிவித்து பாராட்டினார். தொடர்ந்து பள்ளி கொடியை ஏற்றி வைத்து, மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட அவர், மாணவர்களிடம் ஒழுக்கம், பொறுப்புணர்வு மற்றும் தலைமைத்திறன் குறித்து ஊக்கமளிக்கும் வகையில் உரையாற்றினார்.





பள்ளி முதல்வர் ஒய். ரெஜினா பெலிஷியா தலைமை உரையாற்றி, மாணவர்கள் கல்வியுடன் சமூகப் பொறுப்பையும் உணர்ந்து செயல்பட வேண்டும் என அறிவுறுத்தினார். நிகழ்ச்சியில் பிஆர்ஓ சையத் ஜஹிருத்தீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மாணவத் தலைவர் செ. அகிலன் வரவேற்புரையாற்றினார். மாணவிகள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினர். அறிவியல் ஆசிரியர் நன்றியுரை கூறினார்.

தேசிய கீதத்துடன் விழா நிறைவுற்றது.

# போதைக்கு முற்றுப்புள்ளி: ஊமச்சிகுளம் உட்கோட்டத்தில் பாய்ந்தது 'குண்டாஸ்

மதுரை மாவட்டத்தில் போதைப்பொருள் புழக்கத்தை முற்றிலுமாக ஒழிக்க மாவட்ட காவல் துறை தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, ஊமச்சிகுளம் உட்கோட்டம், ஒத்தக்கடை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வந்த 4 முக்கிய குற்றவாளிகளை போலீசார் அதிரடியாக கைது செய்தனர். இவர்களின் தொடர் சட்





டவிரோத செயல்களை கட்டுப்படுத்தும் பொருட்டு, ஒரே நாளில் 4 பேர் மீதும் குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்கள் மத்தியசிறையில்அடைக்கப்பட்டனர். மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் இந்த அதிரடி உத்தரவு, போதைப் பொருள் வியாபாரிகளிடையே பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் காவல்துறையின் இந்த அதிரடி நடவடிக்கைக்கு பாராட்டு தெரிவித்துள்ளனர்.

# உள்ளாட்சி தேர்தலில் காங்கிரஸ் அதிகாரப் பங்கிற்கு ஒன்றுபட்டு செயல்பட வேண்டும்: அமைச்சர் செ.ராஜேஷ்குமார் அழைப்பு

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் "லஞ்சம் தவிர், நெஞ்சம் நிமிர்" என்ற தலைப்பில் நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் செங்கம் சாலையில் உள்ள தனியார் மகாலில் நடைபெற்றது. மாவட்ட காங்கிரஸ் தலைவர் கே. குணசேகரன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் செ. ராஜேஷ்குமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

அமைச்சர் செ. ராஜேஷ்குமார் பேசுகையில், "வரவிருக்கும் உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு காங்கிரஸ் நிர்வாகிகள் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும். மக்கள் நலன் சார்ந்த ஆட்சியை வழங்கும் நோக்கில் தவெககாங்கிரஸ் கூட்டணி தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இந்த கூட்டணி நீண்டகால அரசியல் பயணமாக இருக்கும்" என்றார். மேலும், "தவெக ஆட்சி வெளிப்படைத் தன்மை கொண்ட மக்கள் ஆட்சி.





லஞ்சம், ஊழல் இல்லாத நிர்வாகமே காங்கிரஸ் மற்றும் தவெகவின் அடிப்படை எண்ணம். நாடாளுமன்ற தேர்தலிலும் இந்த கூட்டணி தமிழகமும் புதுச்சேரியும் சேர்த்து 40 தொகுதிகளிலும் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை உள்ளது" என்றும் தெரிவித்தார்.

பொதுமக்கள் மற்றும் காங்கிரஸ் தொண்டர்கள் தங்களது கோரிக்கை மனுக்களை ஒவ்வொரு வியாழக்கிழமையும் மாலை சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேரில் வழங்கலாம் என்றும், அவற்றை நிறைவேற்றுவதற்கு தன்னால் முடிந்த வரை பாடுபடுவேன் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

இந்தக் கூட்டத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகத் துறை மாவட்டத் தலைவர் கே.கே. அரவிந்தராஜ், மாநில நிர்வாகி செந்தமிழரசு, முன்னாள் மாவட்டத் தலைவர்கள் பி.எஸ். விஜயகுமார், செங்கம் ஜி. குமார், மாவட்ட துணைத் தலைவர் வழக்கறிஞர் அம்பிகாபதி, திருவண்ணாமலை மாநகரத் தலைவர் என். வெற்றி செல்வன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர மற்றும் வட்டார நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருவண்ணாமலை தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் கே. குணசேகரன் மற்றும் நிர்வாகிகள் செய்திருந்தனர். முன்னதாக அமைச்சர் செ. ராஜேஷ்குமாருக்கு மாநகர காங்கிரஸ் தலைவர் என். வெற்றிசெல்வன் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

# பாவலர் சி.சூர்யாவின் கவிதை நூல் அறிமுக விழா: மேலூரில் திரண்ட தமிழ் ஆர்வலர்கள்

மதுரை மாவட்டம் மேலூரில் பாவலர் சி.சூர்யா அவர்கள் எழுதிய "இளைய சமூகமே எழுக" கவிதை நூல் அறிமுக விழா மற்றும் வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவின் தொடக்கமாக ஜீவா அனைவரையும் வரவேற்று வரவேற்புரை வழங்கினார். அதனை தொடர்ந்து, நாம் தமிழர் கட்சியின் பாசறை ஒருங்





கிணைப்பாளர் சிவராமன் நூலை முறைப்படி வெளியிட, தமிழர் மக்கள் இயக்கத்தின் தலைமை குழு உறுப்பினர் தங்கம் அடைக்கன் நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். இவ்விழாவில் மேலூர் 2 ஆம் தொகுதி தலைவர் சாமிக்கண்ணு முன்னிலை வகித்தார். மேலும், நாம் தமிழர் கட்சியின் மாநில இளைஞர் பாசறை ஒருங்கிணைப்பாளர் மணிக்குமார், சிவகங்கை மேற்கு மாவட்ட செயலாளர் திருமாறன், பாண்டிய ராசன் மற்றும் வெள்ளை காளை ஆகியோர் கலந்துகொண்டு, நூலாசிரியர் பாவலர் சி.சூர்யாவை பாராட்டியும், கவிதைகளின் சிறப்புகள் குறித்தும் வாழ்த்துரை வழங்கினார்கள். இவ்விழாவில் தமிழ் ஆர்வலர்கள், கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் திரளாகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.



திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலுவலராக அ.சிவசுப்பிரமணிய பிள்ளை (19.07.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

# கச்சிராயம்பட்டி ஆடுதுறை கல்குவாரியை நிரந்தரமாக மூடக்கோரி மதுரை ஆட்சியரிடம் கிராம மக்கள் மனு

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம், கொட்டாம்பட்டி ஒன்றியத்திற்குட்பட்ட கச்சிராயம்பட்டி ஊராட்சி, புல எண் 697ல் செயல்பட்டு வரும் ஆடுதுறைகல்குவாரியைஆய்வு செய்து, அதனை நிரந்தரமாக மூட நடவடிக்கை எடுக்க வேண்டும்



என க.புதுார் கிராம மக்கள் மதுரை மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்துள்ளனர். குறிப்பிட்ட இந்த கல்குவாரி, சிறு கனிம சலுகை விதிகளை மீறி சட்டவிரோதமாக செயல்பட்டு வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். இங்கு அமைந்துள்ளகருப்பையாஊரணி, அருவிக்குளம், வில்லுத்து நீரூற்று உள்ளிட்ட நீர்நிலைகள், ஓடைகள், குடியிருப்புகள் மற்றும் சாலைகள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும், தொல்லியல் சின்னங்களான சமணர் படுக்கைகள், கல்வெட்டுகள் மற்றும் அழிவின் விளிம்பில் உள்ள அரிய வகை சாம்பல் நிற தேவாங்குகள் வாழும் வாழிடங்கள் போன்றவை அழியும் சூழல் உருவாகியுள்ளது. உண்மை ஆவணங்களை மறைத்து, விதிகளுக்கு புறம்பாக இந்த குவாரி நடத்தப்பட்டு வருவதால், க.புதுார் மக்களின் வாழ்வாதாரம் முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த கல்குவாரியை மூட வலியுறுத்தி, கடந்த ஆண்டு பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், மாவட்ட ஆட்சியரிடமும் மனு அளித்தனர்.

இருப்பினும், தொடர்ந்து குவாரி செயல்பட்டு வந்ததால், கடந்த ஜூன் 15ஆம் தேதி பொதுமக்கள் மீண்டும் தீவிர சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது சம்பவ இடத்திற்கு வந்த மேலூர் வட்டாட்சியர், கல்குவாரி பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்படும் என்றும், கனிமவளத் துறை மூலம் முழுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார். அதை ஏற்று பொதுமக்கள் போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டனர்.

ஆனால், போராட்டத்திற்கு தலைமை தாங்கியவர்களுக்கும், பங்கேற்ற பொதுமக்களுக்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதால், பாதுகாப்பு வழங்க கோரி கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் மக்கள் மனு அளித்தனர். வட்டாட்சியரின் அறிவிப்புக்கு பின்னரும், முறையான ஆய்வுகள் ஏதும் நடத்தப்படாமல் கல்குவாரியில்கல்உடைக்கும்வேலைகள்தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளன. இதனால், அதிர்ச்சியடைந்த க.புதுார் கிராம மக்கள், சட்டவிரோதமாக செயல்படும் ஆடுதுறை கல்குவாரியின் முறைகேடுகளை முழுமையாக ஆய்வு செய்து, அதனை உடனடியாகவும் நிரந்தரமாகவும் மூட நடவடிக்கை எடுக்க வேண்டும் என மதுரை மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து மீண்டும் கோரிக்கை மனுவை அளித்துள்ளனர்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் நாள் பல்நோக்கு கூட்டரங்கில் மாவட்டஆட்சித்தலைவர்ச.கவிதாபொதுமக்களிடமிருந்துகோரிக்கைமனுக்களைபெற்றுக்கொண்டு அதற்கு உரிய தீர்வு காண சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்திரவிட்டார். மாவட்ட வருவாய் அலுவலர் கே.வி.ராஜ்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி) வெங்கடேசன், உதவி ஆணையர் (கலால்) முருகவேல், மாவட்ட வழங்கல் அலுவலர் முத்துலட்சுமி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் உஷாராணி மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 1,002 மனுக்கள்:

# மாற்றுத்திறனாளிகளுக்கு நல உதவிகள் வழங்கிய கலெக்டர் வந்தனா கார்க்

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (20.07.2026) நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, அவற்றுக்கு விரைந்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்குஉத்தரவிட்டார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கல்வி உதவித்தொகை, வங்கிக் கடனுதவி, முதியோர் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, சாதிச்சான்று, வேலை வாய்ப்பு, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை மற்றும் உபகரணங்கள், சாலை வசதி, பிரதான மந்திரியின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம், வேளாண்மை பயிர்க்கடன், புதிய நீர்தேக்கத் தொட்டி அமைத்தல், தாட்கோ கடனுதவி, கூட்டுறவு சங்க பயிர்க்கடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 826 மனுக்கள் பெறப்பட்டன.

இந்த மனுக்களுக்கு உரிய தீர்வு காண அனைத்து துறை அலுவலர்களும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். மேலும், செய்யார்சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 112 மனுக்களும், ஆரணி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் 64 மனுக்களும் பெறப்பட்டன. இதன் மூலம் மாவட்டம் முழுவதும் மொத்தம் 1,002 மனுக்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் நடவடிக்கைக்காக வழங்கப்பட்டன.



அதனைத் தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், ஒரு மாற்றுத்திறனாளிக்கு கைதாங்கி, மற்றொருவருக்கு மூன்று சக்கர சைக்கிள் மற்றும் இன்னொருவருக்கு காதொலி கருவி வழங்கி மாவட்ட ஆட்சித்தலைவர் நல உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணிய பிள்ளை, உதவி ஆணையர் (கலால்) செந்தில்குமார், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு) இளவரசன், திட்டஅலுவலர்(பழங்குடியினர் நலன்) கலைச்செல்வி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் செந்தில்குமரன், மாவட்ட பிற்படுத்தப்ப ட்டோர் நல அலுவலர் மதுசெழியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராமகிருஷ்ணன், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர்செல்வம், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சாரதா மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஒட்டப்பிடாரம் தொகுதி கச்சேரி தளவாய்புரம் தேவேந்திர குல வேளாளர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ சந்தன மாரியம்மன் ஸ்ரீ காளியம்மன் கோவில் கொடை விழாவை முன்னிட்டு

## கபடி போட்டியை முன்னாள் எம்எல்ஏ மோகன், எம் ஆர் வி கவியரசன், எம்.சி. சமூக சேவகர் டாக்டர் A.சுதாகர் ஆகியோர் துவக்கி வைத்தனர்

ஒட்டப்பிடாரம் தொகுதி கச்சேரி தளவாய்புரம் தேவேந்திர குல வேளாளர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ சந்தன மாரியம்மன் ஸ்ரீ காளியம்மன் கோவில் கொடை விழாவை முன்னிட்டு நடைபெற்ற கபடி போட்டியை முன்னாள் எம்எல்ஏ மோகன், எம் ஆர் வி கவியரசன், எம்.சி. சமூக சேவகர் டாக்டர் A.சுதாகர் ஆகியோர் துவக்கி வைத்தனர்

ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கச்சேரி தளவாய்புரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ செல்வவிநாயகர், ஸ்ரீ சந்தன மாரியம்மன் ஸ்ரீ காளியம்மன் கோவில் கொடை விழாவை முன்னிட்டு எஸ் வி சிட்பண்டு நிறுவனர் சமூக சேவகர்டாக்டர்A.சுதாகர் மாவட்ட்அதிமுக இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை செயலாளரும் கோவில்பட்டி நகர மன்ற உறுப்பினருமான கவியரசன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கபடிப் போட்டியை, முன்னாள் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் மோகன், துவக்கி வைத்தார், நிகழ்ச்சிக்கு வருகை தந்த ஒட்டப்பிடாரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மோகன் மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை செயலாளர், கோவில்பட்டி நகர மன்ற உறுப்பினர் எம் ஆர் வி கவியரசன் தூத்துக்குடி எஸ்வி சிட்பண்ட் அதிபர்சமூக சேவகர்டாக்டர்A சுதாகர், ஆகியோருக்கு கபடி போட்டி விழா கமிட்டி சார்பில் ஆளுயர மாலை அணிவித்து கௌரவித்தனர்





இந்நிகழ்ச்சியில் கபடி போட்டிக்கான விளையாட்டு ஒருங்கிணைப்பாளர் ஒட்டப்பிடாரம் கண்ணன்மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சி மீனவர் அணி அமைப்பாளர் ஜான்சன், ஆரோக்கியபுரம் பத்ரகாளியம்மன் கோவில் முன்னாள் தலைவர்பாஸ்கர், இளைஞர் அணி ரியால்ஸ்சன். உட்பட ஏராளமானவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்



திண்டுக்கல் மாவட்டம் பழனி தாலுக்கா தொப்பம்பட்டி ஒன்றியம், தாழையூத்து ஊராட்சி நாகூர் கிராமம் இங்கு 450க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இங்கு கடந்த 10 நாட்களுக்கு மேலாகியும் குடிநீர் விநியோகம் செய்யவில்லை. மக்கள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர். கடும் கோடை வெப்பத்தால் மக்கள் குடிநீர் இல்லாமல் அவதிப்படுகின்றனர். தயவுசெய்து அனைத்து அதிகாரிகளும், தவெக நிர்வாகிகளும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை

### கம்பத்தில் மாற்றுக்கட்சியினர் ஆர்வம்:

# ஹாமிது அன்சாரி தலைமையில் தவெகவில் 500க்கும் மேற்பட்டோர் இணைந்தனர்

கம்பத்தில் மாற்றுக்கட்சியினர் ஆர்வம்: ஹாமிது அன்சாரி தலைமையில் தவெகவில் 500க்கும் மேற்பட்டோர் இணைந்தனர்.

தேனி மாவட்டம் கம்பத்தில் தமிழக வெற்றி கழகத்தில் புதிய உறுப்பினர்கள் இணையும் விழா மற்றும் 'ஹாமித் கன்ஸ்ட்ரக்ஷன்' சார்பில் ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. கடந்த 19.07.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில், கம்பம் 60 அடி சாலையில் உள்ள திடலில் ஹாமிது அன்சாரி அவர்கள் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. கம்பம் சட்டமன்ற உறுப்பினர் PLA ஜெகநாத் மிஸ்ரா எம்எல்ஏ அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அவரது முன்னிலையில், ஹாமிது அன்சாரி தலைமையில் மாற்றுக்கட்சிகளை சேர்ந்த 500க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உற்சாகத்துடன் தங்களை தமிழக வெற்றி கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.






நிகழ்ச்சியில் பேசிய ஹாமிது அன்சாரி அவர்கள், "தற்போதைய அரசியல் சூழலில், தமிழக வெற்றி கழகத்தின் கொள்கை மற்றும் தலைவரின் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டு, மாற்றுக் கட்சியினர்பலரும்தானாகவே முன்வந்து தவெகவில் இணைய பெரும் ஆர்வம்காட்டி வருகின்றனர். இனிவரும் காலங்களிலும் எனது தலைமையில் முடிந்தவரை ஏராளமான தொண்டர்களை கட்சியில் இணைக்க தொடர்ந்து தீவிரமுயற்சிசெய்வேன்" எனக் குறிப்பிட்டார். இதனை தொடர்ந்து நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், 'ஹாமித் கன்ஸ்ட்ரக்ஷன்' சார்பில் 300க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கூடலூர் செல்வேந்திரன், சுப்பிரமணியம் அய்யர், அபுதாகிர் உட்படக்கட்சியின்முக்கியநிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### செங்குன்றத்தில்

# கிருதி சுசூகி பைக் ஷோரூம் திறப்பு விழா

கிருதி சுசூகி பைக் ஷோரூம் திறப்பு விழா செங்குன்றம் நெல் அரிசி வணிகர் சங்க திருமண மண்டபம் அருகே கிருதி சுசூகி பைக் ஷோரூம், ஏவிஜ மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் இயக்குநர் அஜித்குமார் தலைமையேற்று ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார்.

நிர்வாக இயக்குநர்கள் அன்ஹீத் குமார், அமிஷ் குமார், அக் ஷய் குமார் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் பாடியநல்லூர் ஜெயலட்சுமி நடராஜன், புள்ளிலைன் தமிழ்ச்செல்விரமேஷ், கேஆர்வி குரூப்ஸ் தலைவர் கே. ஆர். வெங்கடேஷ், எம். எஸ். குரூப்ஸ் சன் முனியாண்டி, பாடியநல்லூர் ஊராட்சி மன்றமுன்னாள்துணைத் தலைவர் ஆனந்த், வி.கே. எண்டர்பிரைசஸ் வி.கே. சங்கர், பேஸ்மேன் பைனான்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிர்வாக இயக்குநர் தீப் சந்த் லூனியா, புள்ளிலைன் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஆர். சுப்பிரமணி உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி வைத்தனர். இந்நிகழ்வில் கிருதி சுசூகி, ஏவிஜ மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் நிர்வாகிகள் ஊழியர்கள், குடும்பத்தினர், பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




# அசனாமாபேட்டை கூட்ரோட்டில் இயங்கும் டாஸ்மாக் கடையை அகற்றக் கோரி வீதி லீடர்ஸ் அமைப்பினர் மனு

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அருகே அசனாமாபேட்டை கூட்ரோடு பகுதியில் இயங்கி வரும் அரசுமதுபானக்கடையை அகற்றக் கோரி, வீதி லீடர்ஸ் அமைப்பினர் துணை மாவட்ட ஆட்சியர்அம்பிகாஜெயினிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

செய்யாறு வெங்கடேசன் தலைமையில் அளிக்கப்பட்ட மனுவில், அசனாமாபேட்டை கூட்ரோடு பகுதியில் செயல்பட்டு வரும் டாஸ்மாக் மதுபானக் கடையால் பொதுமக்களுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுவதாகவும், குறிப்பாக பெண்கள் மற்றும் மாணவர்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. எனவே, பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு அந்த மதுபானக்கடையை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.




இந்த மனு அளிக்கும் நிகழ்ச்சியில் வீதி லீடர்ஸ் அமைப்பைச் சேர்ந்த ரமேஷ், அருள், பூபதி, அசோக் பிரபாகரன், கோவிந்தராஜ், சரவணன், சக்தி, சத்யா, நரசிம்மன், சாந்தஸ்ரீ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நடிகர் சூர்யா அவர்களின் 51வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பழனி அரசு மருத்துவமனையில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட தலைமை சூர்யா நற்பணி இயக்கம் சார்பில் ரத்ததான முகாம் நடைபெற்றுவருகிறது 50க்கும் மேற்பட்டவர்கள் ரத்ததானம் செய்து வருகின்றனர் மாவட்ட தலைவர் கார்த்தி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த ரத்ததான முகாம் மாவட்ட பொருளாளர் ரிஷி ஆகியவரின் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் பெண்கள் நகர ஒன்றிய இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு ரத்ததானம் செய்தனர்

# பேரிடர் காலத்தின் முதல் மீட்பர்களாக இளைஞர்கள் உருவாக வேண்டும்

## 'இளம் பேரிடர் நண்பன்' பயிற்சியை தொடங்கிய கலெக்டர் வந்தனா கார்க்

திருவண்ணாமலை மாவட்டத்தில் பேரிடர் காலங்களில் பொதுமக்களை பாதுகாப்பாக மீட்கும் திறனை இளைஞர்களிடம் உருவாக்கும் நோக்கில், 'இளம் பேரிடர் நண்பன்' தன்னார்வலர்களுக்கான வாரகால உறைவிடப் பயிற்சி வகுப்பை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்.



தமிழ்நாடு மாநில பேரிடர்மேலாண்மைஆணையம் சார்பில் கீழ்நாச்சிப்பட்டு தனியார் கல்லூரியில் இன்று (20.07.2026) நடைபெற்ற நிகழ்ச்சியில், NCC, NSS மற்றும் *My Bharath* தன்னார்வலர்களுக்கான *Yuva Aapda Mitra Volunteers Training* வகுப்பை ஆட்சித்தலைவர் துவக்கி வைத்தார். பின்னர் அவர் பேசியதாவது: இயற்கைப் பேரிடர்கள் ஏற்படும் போது உள்ளூர் மக்களும் இளைஞர்களுமே முதல் மீட்பர்களாகச் செயல்படுகின்றனர். உயிர்ச்சேதத்தைக் குறைக்கவும், அவசரநிலைகளில் துரிதமாகச் செயல்படவும் இதுபோன்ற பயிற்சிகள்மிகமுக்கியமானவை. தமிழ்நாடு முழுவதும் மாவட்ட அளவில் 'இளம் பேரிடர் நண்பன்' என்ற தலைப்பில் வாரகால உறைவிடப் பயிற்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

அதன்படி, திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெறும் இப்பயிற்சி 20.07.2026 முதல் 26.07.2026 வரை நடைபெறுகிறது. இதில் 159 ஆண்கள், 140 பெண்கள் என மொத்தம் 299 தன்னார்வலர்கள் பங்கேற்று பயிற்சி பெறுகின்றனர். பயிற்சியில் பெருவெள்ளம், புயல், நிலநடுக்கம், நிலச்சரிவு, தீ விபத்து போன்ற அவசரநிலைகளில் பொதுமக்களை பாதுகாப்பாக மீட்பது குறித்த செயல்முறை விளக்கங்கள் வழங்கப்படுகின்றன. மேலும் காயமடைந்தவர்களுக்கு முதலுதவி, மூச்சுத்திணறல் ஏற்பட்டவர்களுக்கு சி.பி.ஆர். (CPR) வழங்கும் முறைகள், கயிறுகள் கட்டுதல், மிதவைகள் உருவாக்குதல் மற்றும் எச்சரிக்கை தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துதல் போன்ற பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, மாநிலப் பேரிடர் மீட்புப் படை (SDRF) மற்றும் இந்தியச் செஞ்சிலுவை சங்க வல்லுநர்கள் இப்பயிற்சியை வழங்குகின்றனர். "இளம் பேரிடர் நண்பர்களாகப் பயிற்சி பெறும் நீங்கள் முழு ஈடுபாட்டுடன் கற்றுக்கொண்டு, உங்கள் பகுதிகளில் பேரிடர் காலங்களில் பொதுமக்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். இந்த பயிற்சி குறித்த விழிப்புணர்வையும் மக்களிடையே ஏற்படுத்த வேண்டும்," என மாவட்ட ஆட்சித்தலைவர் வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) ராஜேஷ்வரி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோலார் தங்க வயல் கென்னடி 4வது வார்டு முன்னாள் நகர சபை கவுன்சிலர் வேணி பாண்டியன் பலமுறை சுத்தம் செய்தும் தீராத அவலம்:

# கோலார் தங்க வயல் ஸ்விம்மிங் பாத் லைன் ரயில்வே அண்டர்பாஸ் குப்பைக் காடாக மாறியது - துர்நாற்றத்தில் தினமும் தவிக்கும் பொதுமக்கள்

ஒரு நகரத்தின் வளர்ச்சியை அதன் சாலைகளும், தூய்மையும் எடுத்துக்காட்டும்.

ஆனால் கோலார் தங்க வயலில் உள்ள ஸ்விம்மிங் பாத் லைன் ரயில்வே அண்டர்பாஸ் இன்று அதற்கு நேர்மாறான ஒரு வேதனையான நிலையைச் சந்தித்து வருகிறது.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தினமும் பயன்படுத்தும் இந்த முக்கிய பாதை, குப்பைகள் குவிந்து துர்நாற்றம் வீசும் இடமாக மாறியிருப்பது அப்பகுதி மக்களின் மன வேதனையை அதிகரித்துள்ளது.

இந்த அண்டர்பாஸ் வழியாக பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், சிறு வியாபாரிகள், பெண்கள், முதியவர்கள் என ஏராளமானோர் தினமும் பயணம் செய்கின்றனர். ஆனால் அவர்கள் பாதுகாப்பாகவும் சுகாதாரமாகவும் செல்ல வேண்டிய இந்த வழி, இன்று மூக்கைப் பொத்திக் கொண்டு கடக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.



சாலையின் இருபுறங்களிலும் சட்டவிரோதமாக கொட்டப்படும் குப்பைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

அவற்றில் இருந்து வீசும் கடும் துர்நாற்றம் அந்தப் பகுதியை முழுவதுமாக ஆக்கிரமித்துள்ளது.

மழைக்காலங்களில் இந்தக் கழிவுகள் நீருடன் கலந்து சாலையில் பரவுவதால், பாதசாரிகளும் வாகன ஓட்டிகளும் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

இந்த நிலையை மாற்ற வேண்டும் என்ற நோக்கில் கென்னடி 4வது வார்டு முன்னாள் நகர சபை கவுன்சிலர் திரு. வேணி பாண்டியன் பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து கோரிக்கை வைத்ததோடு, நகராட்சி ஊழியர்களின் மூலம் அண்டர்பாஸ் பகுதியில் குப்பைகளை அகற்றும் பணிகளையும் மேற்கொள்ளச் செய்துள்ளார். பல தடவைகள் சுத்தம் செய்யப்பட்டும், சிலர் மீண்டும் அதே இடத்தில் குப்பைகளை கொட்டுவதால் இந்தப் பிரச்சினைதொடர்கிறது.

இதனால், "ஒருவர் சுத்தம் செய்கிறார்; மற்றொருவர் மீண்டும் அசுத்தப்படுத்துகிறார்" என்ற வேதனையான நிலை உருவாகியுள்ளது. பொதுச் சொத்துகளைப் பாதுகாக்க வேண்டிய சமூகப் பொறுப்பு குறைந்து வருவது இந்த நிகழ்வின்மூலம் வெளிப்படுவதாக அப்பகுதி மக்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

பள்ளி மாணவர்களின் உடல்நலம், தொழிலாளர்களின் அன்றாடப் பயணம், வியாபாரிகளின் வாழ்வாதாரம் என பல தரப்பினரின் வாழ்க்கையை இந்த நிலை பாதித்துள்ளது.

சுகாதாரக் கேடு மட்டுமல்லாமல், தொற்று நோய்கள் பரவும் அபாயமும் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்த அண்டர்பாஸ் பகுதியில் நிரந்தர கண்காணிப்பு ஏற்பாடு செய்ய வேண்டும். குப்பை கொட்டுவோருக்கு கடுமையான அபராதம் விதிக்கவேண்டும். கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட வேண்டும்.

தூய்மைப் பணிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். அதே நேரத்தில், பொதுமக்களும் சமூகப் பொறுப்புடன் செயல்பட்டு, பொதுஇடங்களில் குப்பைகளை கொட்டாத பழக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்பதே அனைவரின் வேண்டுகோளாக உள்ளது. பலமுறை சுத்தம் செய்யப்பட்டும் மீண்டும் குப்பைக் குவியலாக மாறும் இந்த முக்கிய ரயில்வே அண்டர்பாஸ், கோலார் தங்க வயலின் சுகாதார நிலையை கேள்விக்குறியாக்கியுள்ளது.

சம்பந்தப்பட்ட துறைகள் உடனடி மற்றும் நிரந்தர நடவடிக்கை எடுத்து, பொதுமக்களின் நீண்டநாள் வேதனைக்கு முடிவு கட்ட வேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் உருக்கமான கோரிக்கையாகும்..



திண்டுக்கல் மாவட்டம் பழனி திரு ஆவினன்குடி அருகே போக்குவரத்து தாளவாட பொருட்கள் சேதம் அடைந்து உள்ளன வாகனங்கள் நிறுத்துவதற்கு பொதுமக்கள் நடந்து செல்வதற்கும் இடையூறாக உள்ளன இதனை அப்புறப்படுத்தி தரவேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்



# ஸ்ரீ கெங்கையம்மன் ஆலய தீமிதி திருவிழாவை முன்னிட்டு அன்னதானம்

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பம்மதுகுளம் ஊராட்சி கோணிமேடு கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் 28ம் ஆண்டு ஆடிமாத தீமிதி திருவிழாவை முன்னிட்டு ஆலய அன்னதானக் குழுவினர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் 2000த்திற்கும் மேற்பட்ட பக்தர்கள், கிராம பொதுமக்களுக்குமட்டன்குழம்பு, ரசம் உள்ளிட்ட அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.

# கல்பட்டில் ரூ.25 லட்சம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி திறப்பு: வடமணப்பாக்கம் குடிநீர் பிரச்சினையை எம்எல்ஏ ஆய்வு

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அருகே உள்ள வெம்பாக்கம் வட்டம் கல்பட்டு கிராமத்தில் ரூ.25 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியை செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் முக்கூர் சுப்பிரமணியன் திறந்து வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார். தொடர்ந்து கல்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை பார்வையிட்ட எம்எல்ஏவிடம், பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டிடம் அமைக்க வேண்டும் என ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் கோரிக்கை வைத்தனர். பின்னர் வடமணப்பாக்கம் பகுதியில் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் குடிநீர் தரமற்றதாகவும், துர்நாற்றம் வீசுவதாகவும் பொதுமக்கள் புகார் தெரிவித்தனர். இதையடுத்து, குடிநீர் பிரச்சினையை உடனடியாக தீர்த்து, தரமான குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என எம்எல்ஏ உறுதியளித்தார்.



மேலும், நூறுநாள் வேலைத்திட்டப் பணிகளை முறையாக வழங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். வடமணப்பாக்கம் மேல்நிலைப் பள்ளியில் சுற்றுச்சுவர் மற்றும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்த வேண்டும் என பள்ளி நிர்வாகம் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் வயலூர் ராமநாதன், துரை, அரங்கநாதன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வெங்கடேசன், குப்புசாமி மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பாடியநல்லூர் எம்.ஏ. நகர் ஸ்ரீ மொண்டியம்மன் ஆலயத்தில் ஆடி திருவிழா

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி மொண்டியம்மன் நகர் அருள்மிகு ஸ்ரீ மொண்டியம்மன் ஆலயத்தில் 63ஆம் ஆண்டு ஆடிமாத திருவிழா ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது.



நிகழ்ச்சியில் அம்மனுக்குபல்வேறுவாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் கங்கை திரட்டுதல், காப்புகட்டுதல், பூங்கரகம் எடுத்தல், கூழ் வார்த்தல் வார்த்தல், கும்பம் படையல்பூஜை போன்றவை நடைபெற்றது.

இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர். இத்திருவிழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைசெய்து சுவாமி தரிசனம் செய்தனர். இதனைத்தொடர்ந்து அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பித்து மேளதாள வானவேடிக்கையுடன் திருவீதி உலா நடைபெற்றது. முடிவில் அம்மனுக்கு மஞ்சள் நீராட்டு மற்றும் விஷேச பூஜை நடைபெற்றது.

# பெருவாயல் டி.ஜெ.எஸ் கல்லூரியில் மாணவர்கள் வரவேற்பு விழா




திருவள்ளூர் மாவட்டம் கவரைப்பேட்டை பெருவாயல் டி.ஜெ.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதிதாக சேர்ந்த மாணவர்களுக்கு வரவேற்பு விழா முன்னாள் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும் டி.ஜெ.எஸ் கல்விக் குழுமங்களின் தலைவருமான டி.ஜெ.கோவிந்தராஜன் தலைமையில் நடைபெற்றது. நிர்வாக இயக்குனர் டி.ஜெ.ஆறுமுகம், கல்லூரியின் இயக்குனர் ஏ. கபிலன் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் டாக்டர்வி.லட்சுமிபதிஅனைவரையும் வரவேற்றார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக சென்னையில் உள்ள தனியார் கல்லூரியின் முன்னாள் முதல்வரும் பிரபல பட்டிமன்ற பேச்சாளருமான டாக்டர் டி.எஸ். பிரேமா பங்கேற்று உரையாற்று கையில் தேடல் இல்லை என்றால்சுவையிருக்காது என்றவர் தமிழக முதல்வர் விஜய் நடித்த துள்ளாத மனமும் துள்ளும் படத்தில் இடம்பெற்ற இன்னிசை பாடிவரும் காற்றுக்கு இளம் உருவமில்லை என்ற பாடலில் வரும் தேடல் இல்லா வாழ்க்கையிலே என்ன ருசியிருக்கும் இதை தேடி தேடி தேடி நெஞ்சம் தொலைந்து போனதே வரிகளை மேற்கோள் காட்டி மாணவர்களை உற்சாகப்படுத்தினார். தொடர்ந்து பேசிய டாக்டர் பிரேமா உங்களுக்கு தேடல் இல்லையெனில் வாழ்க்கையில் ருசியிருக்காது எனவே நீங்க தேடனும் ஓடனும் அச்சீவ் பண்ணனும் உங்க குடும்பத்தை காப்பாற்ற வேண்டும் என்ற வெறி இருக்கணும் அப்பதான் வாழ்க்கையில் வெற்றிபெற முடியும் என மாணவர்களை உற்சாகப்படுத்தும் விதத்தில் அவர் அறிவுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் டிஜெஎஸ். பப்ளிக் பள்ளியின் தாளாளரும் கல்விக் குழும இயக்குநருமான டிஜெஎஸ்ஜி. தமிழரசன், மெட்ரிக் பள்ளி முதல்வர் ஞானப்பிரகாசம் உள்ளிட்ட கல்லூரி பேராசிரியர்கள், மாணவமாணவிகள், பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவின் நிறைவாக புதிதாக சேர்ந்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. விழாவில் நடைபெற்ற மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது. இதனை தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுப்பரிசுகள் வழங்கப்பட்டது.



பழனி முருகன்கோயில் கண்காணிப்பாளர் வீட்டில் பூட்டை உடைத்து 24 சவரன் நகை மற்றும் ரூ.15,000 ரொக்கம் கொள்ளை

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் பகுதியில் வசிக்கும் சரவணன்(52),குடும்பத்துடன்வெளியூர்சென்றிருந்த நிலையில், திருட்டு நடந்துள்ளது. மாவட்ட எஸ்.பி. சம்பவ இடத்தில் ஆய்வு

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA